பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

28 10 2025 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இளையோரின் எண்ணங்களும், கருத்துகளும் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நடப்பாண்டின் கரீப் பருவ காலத்தில் விவசாயிகளிடமிருந்து பயறு வகைகளை கொள்முதல் செய்வதற்கு 15 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

3. அணு ஆயுதங்களை பரிசோதித்து பார்த்திருக்கும் ரஷ்யாவின் செயல், கண்டிக்கத்தக்கது என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

4. வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள Montha புயல் இன்று காலை தீவிர புயலாக வலுவடையும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. Hylo ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று ஜெர்மனியில் தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இளையோரின் எண்ணங்களும், கருத்துகளும் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், வளர்ச்சியடைந்த இந்தியா வினாடி-வினா போட்டியில் இளையோர் அதிக அளவில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியா இளம் தலைவர்கள் உரையாடல் நிகழ்ச்சியில் இளைஞர்கள் அதிக அளவில் பங்கேற்று நாட்டின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம்மாதம் 31ஆம் தேதி நடைபெறும் வினாடி-வினா போட்டியில் மக்களும் அதிக அளவில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அடுத்த ஆண்டு ஜனவரி 10ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை நடைபெறும் இறுதி வினாடி-வினா போட்டி நடைபெறும் என்று திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

நடப்பாண்டின் கரீப் பருவ காலத்தில் விவசாயிகளிடமிருந்து பயறு வகைகளை கொள்முதல் செய்வதற்கு 15 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், குறிப்பாக தெலங்கானா, ஒடிசா, மகராஷ்டிரா மற்றும் மத்தியப்பிரதேச மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகளிடமிருந்து இது கொள்முதல் செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தெலங்கானாவில் இருந்து 4 ஆயிரத்து 400 மெட்ரிக் டன் அளவிலான பாசிப்பருப்பு, உளுந்து மற்றும் சோயா பீன் ஆகியவை கொள்முதல் செய்யப்படும் என்றும், 18 ஆயிரத்து 470 மெட்ரிக் டன் அளவிலான துவரம் பருப்பு ஒடிசா மாநிலத்தில் இருந்து கொள்முதல் என்றும் தெரிவித்துள்ளார்.

3 லட்சத்து 25 ஆயிரத்து 680 மெட்ரிக் டன் அளவிற்கு கருப்பு உளுந்து கொள்முதல் செய்யப்படும் என்றும், 18 லட்சத்து 50 ஆயிரத்து 700 மெட்ரிக் டன் அளவிலான சோயா பீன் மகாராஷ்டிர மாநிலத்தில் இருந்து கொள்முதல் செய்யப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் இருந்து சுமார் 22 லட்சம் மெட்ரிக் டன் அளவில் சோயா பீன் கொள்முதல் செய்யப்படும் என்றும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள Montha புயல் இன்று காலை தீவிர புயலாக வலுவடையும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகே இன்று மாலை அல்லது இரவு இந்தப் புயல் கரையை கடக்கக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

தற்போது அந்தப் புயலானது வடக்கு, வடமேற்கு திசையில் மணிக்கு 17 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து வருவதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஆந்திர கடற்கரை பகுதிகளில் கனமழை முதல் அதிகன மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் ஒருசில இடங்களில் கனமழை முதல் அதிகன மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, தேனி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும் ஒருசில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

இதனிடையே Montha புயலால் ஏற்படும் பாதிப்பை எதிர்கொள்ளும் வகையில் பிஜேபி தொண்டர்கள் பணியாற்ற வேண்டும் என்று அக்கட்சியின் தலைவர் திரு. ஜெ.பி. நட்டா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், புயலால் பாதிக்கப்படும் பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் பிஜேபி தொண்டர்கள் ஈடுபட வேண்டும் என்றும், உள்ளூர் நிர்வாகத்தினரின் ஒத்துழைப்போடு மருத்துவ உதவி, சுகாதாரம் மற்றும் தூய்மைப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

இந்த திட்டத்தின்கீழ் தேனி மாவட்டத்தில் நீரிழிவு நோய்க்கான சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை செய்து கொண்ட பயனாளிகள் மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

தமிழகத்தின் சென்னையில் தொடர்ந்து மழை பெய்து வருவதன் காரணமாக குடிநீர் ஆதாரமாக உள்ள 6 நீர்நிலைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

வடகிழக்குப் பருவமழையை ஒட்டி சோழிங்கநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட மண்டலங்களில் எடுக்கப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னையின் குடிநீர் ஆதாரமாக உள்ள பூண்டி, சோழவந்தான், செம்பரம்பாக்கம் உள்ளிட்ட ஏரிகளின் கொள்ளளவு தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உபரிநீர் திறந்துவிடப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக இந்த ஆண்டு பாதிப்பு அதிக அளவில் இருக்காது என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

வடகிழக்குப் பருவமழையின் தாக்கங்களை எதிர்கொள்வதற்கு உரிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

**<<<<>>>>**

அணு ஆயுதங்களை பரிசோதித்து பார்த்திருக்கும் ரஷ்யாவின் செயல், கண்டிக்கத்தக்கது என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ரஷ்யாவின் இந்த நடவடிக்கை கவலையளிப்பதாக திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

இதனிடையே ரஷ்யாவின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அணு ஆயுதப் பரிசோதனை நடத்தப்பட்டதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

மேலும் இது ஒரு மகத்தான சாதனை என்று ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதின் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்த அணு ஆயுதத்தை ராணுவம் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இஸ்ரேல் - பாலஸ்தீனத்திற்கு இடையே நடைபெற்ற சண்டையின்போது காஸா பகுதியில் உயிரிழந்த பிணைக் கைதிகளின் உடல்களை ஹமாஸ் அமைப்பினர் செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

ஒப்படைக்கப்பட்ட உடல்கள் டெல்அவிவில் உள்ள தேசிய தடய அறிவியல் மையத்தில் ஆய்வு செய்யப்பட்டு அடையாளம் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறந்துபோன 28 பிணைக் கைதிகளில் தற்போது 16 பேரின் உடல்கள் இஸ்ரேலிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 12 உடல்கள் காஸாவில் உள்ளதாகவும் ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - பாலஸ்தீன உடன்படிக்கையின்படி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

Hylo ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று ஜெர்மனியில் தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் ஸ்ரீகாந்த், லக்ஷயா சென், ஆயுஷ் ஷெட்டி, அகர்ஷி காஷ்யப், தன்யா ஹேமந்த் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

--------------

23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சுஜித் தங்கப் பதக்கம் வென்றார்.

செர்பியாவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 65 கிலோ எடைப் பிரவின் இறுதியாட்டத்தில் அவர், இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

---------------

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் Lanchenba Singh அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பஹ்ரைனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் குத்துச்சண்டை 50 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 4-1 என்ற புள்ளிக் கணக்கில் தாய்லாந்து வீரரை வென்றார்.

இப்போட்டியின் ஆடவர் 66 கிலோ எடைப் பிரிவில் Anand Deshmukh-கும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--------------

ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணிக்கு எதிரான ஆட்டத்தின் 3வது நாளான நேற்று நாகாலாந்து முதல் இன்னிங்சின் ஆட்டநேர இறுதியில் 5 விக்கெட் இழப்பிற்கு 365 ரன் எடுத்தது.

பெங்களூருவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் தமிழக அணி முதல் இன்னிங்சில் 3 விக்கெட் இழப்பிற்கு 512 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.